முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திரு. பா. கௌதமன், பி.ஏ., பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி.

வா.சா.1 நாள். 26.11.2019

| அ.வ.எண். | 53/2016 | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜ்மோகன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி˙ அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அருணாச்சலம் என்பவர் தான் இந்த வழக்கை வாதிக்காக தாக்கல் செய்தார். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் அருணாச்சலம் வாதி தர்ம பாகத்தின் தலைவராக இருந்தார். 2014ம் ஆண்டு அவருடைய தலைவர் பொறுப்பு முடிந்தது. தற்போதைய தலைவரை வழக்காடியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தற்போதைய தலைவர் பெயர் சுந்தரேசன். வழக்கு விபரத்தை வழக்கறிஞருக்கு அருணாச்சலம் தான் சொன்னார். வழக்கின் முழுவிபரம் எனக்கு தெரியும். கோவில் தர்மம் செய்யப்படவில்லை என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோவில் தர்மம் செய்யப்படுவதை நிரூபிக்க இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்த எந்த தேதிகளில் என்ன என்ன தர்மம் செய்யப்பட்டது என்பதற்கு கணக்கு உள்ளது. அந்த கணக்குகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி தர்மபாகம் 1838 ல் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட போது எழுத்துமூல உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்பிறகு ஏதேனும் உடன்படிக்கை ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. ஐந்து உடன்படிக்கை ஏற்பட்டதாகவும் அந்த 5 உடன்படிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் பிரதிவாதிகள் தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் இதுநாள்

வரை 5 அனுபந்தங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அனுபந்தங்கள் 1,2,5 அனுபந்தங்கள் என்றால் சரிதான். அவை பிவாசாஆ 1 முதல் 3 வரை ஆகும். முதல் அனுபந்தம் கங்கணாம்புத்தூர் சுப்பாபிள்ளை, பல்லவராயன்பேட்டை சொக்கலிங்கம்பிள்ளை, கார்குடி ஆறுமுகத்தான்பிள்ளை, ஏனாதிமங்கலம் சோமசுந்தரம்பிள்ளை, அன்பநாதபுரம் நாகலிங்கம்பிள்ளை ஆகியோரால் 13.08.1838 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். அதில் திருவிழந்தூர் அன்னச்சத்திரம் மற்றும் சிதம்பரம் முதலான கோவில்களுக்கு உபயம், சாவடி, தண்ணீர்பந்தல், மண்டகபடி முதலானவை முன்னோர்கள் செய்து வந்ததை போல நாமும் செய்து வர வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. அது பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். 19.01.1889 ல் 2வது அனுபந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். அதில் 5 குடும்பத்தின் மூத்த உறுப்பினர் தர்மபாக தலைவராக வரலாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தர்மபாகத்தில் வேலை செய்யும் நபர்களை தனி நபர் வேலைக்கு பயன்படுத்தக்கூடாது என்றும், தர்ம சொத்தில் விளையும் பொருட்களை தனி நபர் எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் தர்ம செலவு போக மீதமுள்ள தொகையை வங்கியில் செலுத்த வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அனுபந்தம் 5ல் எந்த எந்த கோவில்களுக்கு நித்தியபடி பூஜை செய்ய வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. 3 கோவில்களுக்கு மாதஏறுபடி, 42 கோவில்களுக்கு வருட ஏறுபடி, 6 வகையான அன்னதானம் செய்யவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள அசல் வழக்கு எண் 68/1948 வழக்கு யாரால் எந்த காரணத்திற்காக தொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என்.சோமசுந்தரம்பிள்ளை, நாகலிங்கம்பிள்ளை, திருஞானம்பிள்ளை, வி. சோமசுந்தரம்பிள்ளை ஆகியோர் கணபதியாப்பிள்ளை மீது அந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.